S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் ஜனவரி 05 * 2025 * மலர் -1 * இதழ்-218* VOL-1 * ISSUE-218 விலை ரூ.3 * பக்கம் -4

## 2.23 கோடி பேர் பயனடைவர்:

# பொங்கல் பரிசு தொகுப்புடன் ரூ.3 ஆயிரம் ரொக்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!!

சென்னை, ஜன. 05

பொங்கல் பண்டிகையை சிறப்பாக கொண்டாட பச்சரிசி, சர்க்கரை, முழு கரும்பு அடங்கிய பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரூ. 3,000 ரொக்கமும் வழங்கப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று அறிவித்தார். இதன் மூலம் 2.23 கோடி பேர் பயனடைவர்.

தமிழர்களின் பாரம்பரிய பண்டிகையாக பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இயற்கையின் முதன்மை வடிவாய் அமைந்த சூரியனுக்கும், உழவர்களின் உழைப்பிற்கு உறுதுணையாய் விளங்கும் கால்நடைகளுக்கும், உலக மக்களுக்கு உணவளித்துப் பசி பிணி போக்கும் விவசாயிகளுக்கும் நன்றி கூறி குடும்ப உறவுகள் ஒன்றிணைந்து உலகத் தமிழர்களால் பன்னெடுங் காலமாகக் இந்த பாரம்பரிய உன்னத பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது.

பொங்கல் தினத்தன்று மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்க தமிழக அரசும் ஆண்டுதோறும் பொங்கல்





பரிசு தொகுப்பு வழங்கி வருகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை வருகிற 15-ஆம் தேதி கொண்டாடப்பட உள்ளது.

இதையொட்டி பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்படும் என அரசு அறிவித்து இருந்தது. இதில் ஒரு குடும்ப அட்டைதாரர்களுக்கு 1 கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு அடங்கிய பரிசு தொகுப்பு வழங்கப்படுகிறது. இதற்கான டோக்கன் இன்று முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வருகிற மே மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருப்பதால் பொங்கல் பரிசுத் தொகுப்போடு கணிசமான அளவில் ரொக்கப் பணமும் வழங்கப்படும் என பொதுமக்கள் எதிர்பார்த்தனர். இதற்கிடையே பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 10 நாட்களே இருக்கும் நிலையில் 1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரையுடன் ஒரு முழுக்கரும்பும் அடங்கிய பொங்கல் தொகுப்புடன் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ. 3,000 ரொக்கப் பணமும் வழங்கப்படும் எனமுதலமைச்சர்மு.க.ஸ்டாலின் இன்று அறிவித்தார்.


இதன் மூலம் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் பயன் பெறுவர். இதற்காக தமிழக அரசு சார்பில் ரூ. 6,936 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொங்கல் பரிசுத் தொகுப்பில் வழங்கப்பட உள்ள அரிசி, சர்க்கரை, கரும்பு உள்ளிட்ட பொருட்கள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இருந்து பெறப்பட்டு கூட்டுறவுக் கடைகள் மூலமாக அனைத்து ரேஷன் கடைகளுக்கும் அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலும் பொங்கல் திருஇன்றுயொட்டி வழங்கப்பட உள்ள விலையில்லா வேட்டி, சேலைகள் அனைத்தும் அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.



சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டபம் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு அமைச்சர் மா. சுப்பிரமணியன்,. அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், உத்தமபாளையம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு முகாமில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து நலப்பெட்டகங்களை அமைச்சர்மு.பெ.சாமிநாதன்வழங்கினார்.

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
1-11-1961

மறைவு:
3-1-2026

உள்ளாட்சி அரசு நாளிதழ் ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் தாயார்

திருமதி

# P.சகுந்தலா

அவர்கள்

03-01-2026 அன்று மாலை இறைவனடி சேர்ந்தார், அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

......பிரிவால் வாடும்.....

குடும்பத்தார் மற்றும் நண்பர்கள்
உள்ளாட்சி அரசு ஊழியர்கள்

# தமிழகத்தின் 2026-ம் ஆண்டின் முதல் ஜல்லிக்கட்டு; புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் கோலாகலமாக தொடங்கியது!



புதுக்கோட்டை,ஜன.5

நடப்பாண்டின் முதல் ஜல்லிக்கட்டு புதுக்கோட்டை மா வட்டம் தச்சங்குறிச்சியில் கோலாகலமாக நேற்று கா லை தொடங்கியது,

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டைஅருகேஉள்ளதுதச்சங்குறிச்சி. ஜல்லிக்கட்டை மாவட்ட ஆட்சியர் அருணா தலைமையில் அமைச்சர்கள் ரகுபதி, மெய்ய நாதன், திமுக வடக்கு மாவட்ட செயலாளர் செல்லப்பா ண்டி, கந்தர்வகோட்டை சட்டமன்ற உறுப்பினர் சின்ன துரை ஆகியோர் கொடிய சைத்து தொடங்கி வைத்த நிலையில் வாடிவாசலிலிருந்து துள்ளி குதித்து சீறிப் பாய்ந்து சென்ற காளைகளை வீரர்கள் தீரத்துடன் தழு வி வருகின்றனர்,

ஜல்லிக்கட்டு தொடங்குவதற்கு முன்பு மாடுபிடி வீரர்க ளை வரிசைப்படி அனுப்புவதில் குழப்பம் மற்றும் சிக்க ல் ஏற்பட்டுள்ளதால் மாடுபிடி வீரர்கள் வாக்குவாதம், வாக்குவாதத்தில் ஈடுபட்ட மாடுபிடி வீரர்களை போலீசார் விரட்டினர்.

தமிழ்நாட்டிலேயே அதிகப்படியான வாடிவாசலை கொ ண்ட மாவட்டம் புதுக்கோட்டை. இம்மாவட்டத்தில் தான் அதிகப்படியான ஜல்லிக்கட்டு வட மாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் நடைபெறுவது வழக்கம்.

அதுமட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டின் முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் தான் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நடப்பாண்டிற்கான முதல் ஜல்லிக்கட்டு போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் புனித விண்ணேற்பு அன்னை ஆலைய புத்தாண்டு மற்றும் அந்தோணியார் பொங்கல் விழாவை முன் னிட்டு கோலாகலமாக தொடங்கியது.

இந்த ஜல்லிக்கட்டை மாவட்ட ஆட்சியர் அருணா தலை மையில் தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமை ச்சர் ரகுபதி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர். சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் கொடிய சைத்து தொடங்கி வைத்தனர்.

மேலும் இந்த ஜல்லிக்கட்டில் திமுக வடக்கு மாவட்ட செயலாளர் செல்ல பாண்டியன், கந்தர்வக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் சின்னதுரை ஆகியோரும் பங்கேற்றனர்.

ஜல்லிக்கட்டு தொடங்குவதற்கு முன் ஜல்லிக்கட்டு உ றுதி மொழியை ஆட்சியர் அருணா வாசிக்க காளையர் கள் உள்ளிட்ட அனைவரும் எடுத்துக்கொண்டனர்.

மேலும் போட்டியில் பங்கேற்கும் காளைகள் அழிக்கப் படுவதற்கு முன்பு புனித விண்ணேற்பு அன்னை ஆலய அருட்தந்தை அருளானந்த் வாடிவாசலுக்கு முன்பு நின் று பிரார்த்தனை செய்த நிலையில் மேளதாளங்கள் முழ ங்க வாடிவாசலுக்கு கொண்டுவரப்பட்ட கோயில் கா ளைகள் அவிழ்க்கப்பட்டது.

மேலும் இந்த ஜல்லிக்கட்டு தமிழ்நாட்டின் பல்வேறு பகு திகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 600 காளைகள் 300 காளையர்கள் பங்கேற்றுள்ள நிலையில் ஒரு சுற்றுக்கு 50 வீரர்கள் வீதம் 6 சுற்றுகளாக இந்த ஜல்லிக்கட்டு ந டைபெற்ற வருகிறது.

வாடிவாசலிலிருந்து ஒன்றன் பின் ஒன்றாக காளைகள் அவிழ்க்கப்பட்டு வரக்கூடிய நிலையில் துள்ளிக்குதித்து சீறிப்பாய்ந்து ஆக்ரோசத்துடன் செல்லும் காளைகளை காளையர்கள் மல்லுக்கட்டி தீரத்துடன் காளைகளின் திமிலை தழுவியும் தழுவ முயன்றும் வருகின்றனர்.

மேலும் இந்த ஜல்லிக்கட்டில் 300க்கும் மேற்பட்ட போலீ சார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வரக்கூடிய நிலையி ல் சுகாதாரத்துறை கால்நடை பராமரிப்பு துறை வருவா ய்த்துறை ஊரக வளர்ச்சித்துறை தீயணைப்புத்துறை உள்ளிட்ட பல்வேறு துறை கண்காணிப்பில் ஜல்லிக்கட் டு போட்டி நடைபெற்று வரக்கூடிய நிலையில் 5 ஆயிரத் திற்கும் மேற்பட்ட பொது மக்கள் இந்த ஜல்லிக்கட்டை கண்டு ரசித்து வருகின்றனர்.

மேலும் இந்த ஜல்லிக்கட்டில் சிறந்த முறையில் அதிக காளைகளைத் தழுவும் காளையருக்கும் வீரர்களை திக் கு முக்காட செய்து களத்தில் நீண்ட நேரம் விளையாடும் காளையின் உரிமையாளருக்கும் இருசக்கர வாகனங்க ள் பரிசாக வழங்கப்பட உள்ளது.

மேலும் ஜல்லிக்கட்டு தொடங்குவதற்கு முன்பு மாடுபிடி வீரர்களை வரிசைப்படி அனுப்புவதில் குழப்பம் மற்றும் சிக்கல் ஏற்பட்டுள்ளதால் மாடுபிடி வீரர்கள் வாக்குவா தம், வாக்குவாதத்தில் ஈடுபட்ட மாடுபிடி வீரர்களை போ லீசார் விரட்டினர். இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்ப ட்டது.








# திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் கலெக்டரை நேரில் சந்தித்து மனு!

நெல்லை, ஜன.5

மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள மிகவும் பின்தங்கிய ஒன்றியங்களின்பட்டியலில்தமிழ்நாட்டில்உள்ள16 ஒன்றியங்களில் நெல்லை மாவட்டம் நாங்குநேரி ஒன்றியமும் இருப்பதால் அப்பகுதி மக்கள் பயன்பெறவும்,நாங்குநேரி பகுதி வளர்ச்சியடையவும் கூடங்குளம் அனுமின் நிலைய (CSR)நிதியை நாங்குநேரி பகுதிக்கு விரிவுபடுத்தினால் அந்தப்பகுதி வளர்ச்சி பெரும் . மேலும் கூடங்குளம் அணுமின் நிலைய சமூக மேம்பாட்டு நிதியின் மூலம் 16 கிலோமீட்டர் சுற்று வட்டார கிராமங்கள்தான் பயனடைகிறது. கூடுதலாக 20 கிலோ மீட்டர்வரைநீட்டிப்பு செய்தால் ராதாபுரம் தொகுதி,வள்ளியூர் ,திசையன்விளை பகுதிமக்களும் பயன்பெறுவார்கள். கூடங்குளம் அணுமின் நிலைய சி.எஸ்.ஆர் பணித்திட்டத்தின் நிதியை வழங்க வேண்டும். நிதி வழங்கும் பட்சத்தில் அப்பகுதிகளும் முன்னேற்றமடையும்.

இது தொடர்பாக இந்திய அணுசக்தி துறை, கூடங்குளம் அணுமின் நிலைய நிர்வாகத்திற்கு கடிதம் மூலம் வலியுறுத்த வேண்டும் என நெல்லை கிழக்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் கிரகாம்பெல் நெல்லை மாவட்ட ஆட்சியர் சுகுமாரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார் .

# ஒகேனக்கல்லில் ரோட்டில் சுற்றிய ஒற்றை யானையை வனப்பகுதிக்குள் விரட்டிய வனத்துறையினர்!



தர்மபுரி, ஜன.5

ஒகேனக்கல் சாலையை கடந்து செல்லும் ஒற்றை யானை சாலையை கடக்கும் வாகன ஓட்டிகளை விரட்டியதால் வாகன ஓட்டிகள் பதறி அடித்து ஓட்டம்.

தர்மபுரி மாவட்டத்தில் கோடை காலம் தொடங்கும் முன்பே வறட்சி நிலவி வருகிறது. கர்நாடக மாநிலத்தில் இருந்து 50க்கும் மேற்பட்ட யானைகள் ஒகேனக்கல் வனப்பகுதிக்கு உணவு மற்றும் தண்ணீர் தேடி கோடை காலங்களில் வருவது வழக்கம். கோடை காலம் முடிந்தவுடன் மீண்டும்கர்நாடகவனப்பகுதிக்குதிரும்பி சென்றுவிடும். இதே போல் இந்த ஆண்டு கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்தே கர்நாடக மாநிலத்தில் இருந்தும் அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை, மற்றும் ஒசூர் ஆகிய வனப்பகுதிகளில் இருந்தும் ஒகேனக்கல் வனப்பகுதிக்கு 50க்கும் மேற்பட்ட யானைகள் வந்துள்ளன.

இந்த யானைகள் தற்பொழுது ராசிகுட்டை, சின்னாறு, கோடுபட்டி ஆகிய வனப்பகுதிகளில் முகாமிட்டுள்ளன. ஒகேனக்கல் வனப்பகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் முகாமிட்டுள்ள யானைகள் உணவிற்காகவும் தண்ணீருக்காகவும் ஒகேனக்கல் பென்னாகரம் செல்லக்கூடிய வனப்பகுதிக்கு என் நடுவே அமைந்துள்ள ரோட்டில் முண்டச்சி பள்ளம் என்ற இடத்தில் ரோட்டை கடந்து செல்கிறது.

இதில் ஒற்றை யானையும் இவ்வாறு ஒகேனக்கலில் ரோட்டை கடந்து செல்கிறது . இதேபோல் நேற்று ரோட்டை கடந்த ஒற்றை யானை சாலை ஓரத்தில் இருந்த புளியமரத்தின் கிளைகளை உடைத்து சாப்பிட தொடங்கியது இதனை கண்ட அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் ஒற்றை அணையை அச்சுறுத்தும் வகையில் தங்கள் வாகனங்களில் ஆரன் அடித்தும் சத்தங்கள் எழுப்பியும் யானையை அச்சுறுத்தினர் இதனால் வாகனத்தில் சென்ற வாகன ஓட்டிகளை ஒற்றை யானை விரட்டியதால் பரபரப்பு ஏற்பட்டது.

பின்பு வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து சாலையோரம் சுற்றித்திரிந்த ஒற்றை யானையை வனப்பகுதிக்குள் விரட்டி அடித்தனர். சாலை கடக்கும் போது ஒகேனக்கல் செல்லும் சுற்றுலா பயணிகள் வாகனங்களை நிறுத்தி யானையை போட்டோ எடுக்கிறார்கள் . செல்பி எடுக்கும் செயலிலும் ஈடுபடுகின்றனர். எனவே இது போன்ற செயல்களை சுற்றுலாப் பயணிகள் தவிர்க்க வேண்டும் எனவும் ஒற்றை யானை கடக்கும் பகுதிகளில் கூடுதலாக வன அலுவலர்கள் ரோந்து பணியில் ஈடுபடுத்த வேண்டும் எனவும் வன உயிரின ஆர்வலர்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



# சேலம் காவேரி மருத்துவமனையில் புதியதாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை அறிமுகம்!

சேலம், ஜன.5

சேலம் சீலநாயக்கன்பட்டி பகுதியில் உள்ள, காவேரி மருத்துவமனையில், புதியதாக கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறித்து, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சுவாமிநாதன் இது குறித்து கூறும்போது, சேலம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு கல்லீரல் மாற்று சிகிச்சை சேவைகள் எளிதாக கிடைக்கச் செய்வதை கொண்டு, தமிழ்நாடு அரசு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ், இந்தக் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ள உள்ளதாகவும், இதுவரை 20 வெற்றிகரமான கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்துள்ளதாகவும், இதனால் வரை சிகிச்சைக்காக, பெரு நகரங்களுக்கு செல்ல வேண்டும் என்ற நிலை மாறி, தற்போது சேலத்திலேயே இந்த அதிநவீன சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளதால், கல்லீரல் நோயால் பாதிப்படைந்த மக்கள், இனி வெளியூர்களுக்கு செல்லாமல், நமது சேலத்திலேயே தரமான சிகிச்சைகளை மேற்கொண்டு பயன்பெறலாம் என, காவிரி மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை நிபுணர், டாக்டர் சுவாமிநாதன் தெரிவித்தார்.



பவானி பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பச்சையம்மாள்கோயிலில் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது.

# 2026 வாக்குச்சாவடி மையத்தை காயம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் வைக்க வேண்டி 4-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தேர்தல் புறக்கணிப்பு!





புதுக்கோட்டை,ஜன.5

புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி புதுக்கோட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட வடவாளம் ஊராட்சி உள்ளது. இந்த ஊராட்சியில் பூத் எண் 183, 189,190 ஆகிய பூத்துகளில் உள்ள மேலக்காயம்பட்டி, பாப்பான்கொல்லை,

மேலக்காயம்பட்டி ஆதிதிராவிடர் தெரு, கீழகாயம்பட்டி எம்ஜிஆர் நகர் கணேசபுரம் மற்றும் புதுநகர் கிராமத்தி ற்கு உட்பட்ட சுமார் 800 வாக்காளர்கள் 5 கிலோ மீட்டர் தொலைவில் சென்று வாக்களிக்க சிரமப்படுவதால் வா க்குச்சாவடி மையத்தை காயம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் மாற்றி அமைக்க வேண்டும் என அப்பகுதி யை சேர்ந்த பொதுமக்கள் கோரிக்கை வைத்து உள்ள னர். மேலும் இது தொடர்பாக ததமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்சி.வீ.மெய்யநாதன்இடமும்கோரிக்கை வைத்து மனு கொடுக்கப்பட்டுள்ளதாக பொதும க்கள் சார்பில் கூறிகூறினர்.

இதையடுத்து ஆலங்குடி கும்மங்குளம் சாலையில் உள் ள காயம்பட்டி பிரிவு ரோடு முக்கத்தில் வடவாளம் ஊரா ட்சி பொதுமக்கள் சார்பில் பதாகை வைக்கப்பட்டுள்ளது இந்த பதாகையால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள் ளது.



புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலையால் வீடுகளை மழைநீர் சூழ்ந்துள்ளதால் பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். இதனால் அதிகாரிகளிடம் பொதுமக்கள் உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி குற்றச்சாட்டை தெரிவித்தனர்.

## நடுரோட்டில் மதுபோதையில் பெண் பேராசிரியரை மிரட்டிய வாலிபர்கள்! போலீஸ் விசாரணை!!

கோவை, ஜன.5

நடுரோட்டில் மதுபோதையில் பெண் பேராசிரியரை மிரட்டிய வாலிபர்கள்குறித்து போலீஸ்விசாரணைநடத்தி வருகின்றனர்.கோவை வடவள்ளியை சேர்ந்தவர் மாயா மகாஜன். இவர் தனியார் கல்லூரியில் இணைப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். நேற்று முன்தினம் மாலை அவர் புரூக் பாண்ட் சாலையில் உள்ள மாலுக்கு சென்றுள்ளார். அப்போது அவர் சாலையோரத்தில் தனது காரை நிறுத்தி உள்ளார். இரவு 9.30 மணியளவில் திரும்பி வந்த போது, அங்கு மதுபோதையில் இருந்த வாலிபர்கள், அவரது காரால் தங்களது கார் சேதமடைந்ததாக கூறி தகராறில் ஈடுபட்டுள்ளனர்.

அதற்கு அவர் தனது காரால் அவர்களது காருக்கு எந்த பாதிப்பும் ஏற்பட வில்லை என்று விளக்கி உள்ளார். ஆனால் அவர்கள் அதை மறுத்து மாயா மகாஜன் காரை தாக்கி, மிரட்டி உள்ளனர். அதனை அவர் தனது செல்போனில் பதிவு செய்தார். இதனை பார்த்த அந்த வாலிபர்கள், அவரது செல்போன் மற்றும் கார் சாவியை பறித்ததாக தெரிகிறது.இந்த சம்பவத்தை அவர், சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளார். மேலும் இதுகுறித்து ஆர்.எஸ். புரம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து அவரிடம் தகராறில் ஈடுபட்ட வாலிபர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



# தி.மு.க.வில் இருந்து விலகி அ.தி.மு.க.வில் சேர்ந்தனர்!

மடத்துக்குளம்,ஜன.5

மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினரும், அதிமுகவின் திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழக செயலாளருமான, சி. மகேந்திரன் எம்.எல்.ஏ முன்னிலையில், மடத்துக்குளம் ஒன்றியம், மைவாடி ஊராட்சியில் திமுக கிளைக்கழக செயலாளராக இருந்த தங்கராஜ் என்பவர் தலைமையில், மைவாடி, நரசிங்கபுரம், கே.கே. புதுார், பகுதியில் கடந்த பல வருடங்களாக தி.மு.க.வில் இருந்த 100–க்கும் மேற்பட்டோர், திமுகவில் இருந்து விலகி, தங்களை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்து கொண்டனர்,

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மடத்துக்குளம் தெற்கு ஒன்றிய கழக துணைச் செயலாளர் ரகுராமன் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்வில் மடத்துக்குளம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.பி. சிவலிங்கம் உட்பட கலந்து கொண்டனர்.

# கோவை மாவட்டத்தில் 994 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டா!

## முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தனர்!!

கோவை, ஜன.5

கோவை மாவட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையி் சார்பில் மதுக்கரை வட்டம் பகுதியினை சேர்ந்த994 பயனாளிகளுக்குவீட்டுமனைப்பட்டாக்களை வழங்கியமைக்குதமிழ்நாடுமுதலமைச்சருக்கு பயனாளிகள் தங்களதுநன்றியினை தெரிவித்துள்ளனர்,

தமிழ்நாடுதுணைமுதல்அமைச்சர்உதயநிதிஸ்டாலின்கோவைஆர்.எஸ்புரம் மாநகராட்சி பள்ளியில்கடந்த 30.12.25 அன்று நடைபெற்ற அரசு விழாவில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் சார்பில்மதுக்கரை வட்டம் குறிச்சிகிராமம் பிள்ளையார்புரம்சில்வர்ஜூப்லி, போத்தனூர் வண்ணாரபேட்டைசீனிவாசாபுரம் , இந்திரா்காலனி,ஈச்சனாரி பாடசாலை வீதி மற்றும்கணேசபுரம்,குரும்பபாளையம், பிச்சனூர்ஆகியபகுதிகளைச்சேர்ந்த 994 பயனாளிகளுக்கு வீட்டுமனைப்பட்டாக்களை வழங்கினார். இது தொடர்பாக நிறைந்தது மனம் நிகழ்ச்சியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில்வீட்டுமனைப்பட்டா பெற்ற மதுக்கரை வட்டம், குறிச்சி கிராமம், சில்வர்ஜூப்லி பகுதியைசேர்ந்தபயனாளிபழனிம்மாள் கூறும்போது;என் பெயர் பழனியம்மாள், என் கணவர் பெயர் ஆரோக்கிய சாமி, நான் சமையல் வேலை செய்து வருகிறேன், குறிச்சி கிராமம் சில்வர் ஜூப்லி,நாங்கநீண்ட வருஷமாகவசித்து வருகிறோம், எங்களுக்குன்னு சொந்தமாக எந்தவொருசொத்தும் கிடையாது. நாங்க இருக்கும் இடத்திற்கு வீட்டுமனைப்பட்டாவேண்டி மதுக்கரை தாலுகா அலுவலகத்தில்விண்ணப்பத்திருந்தேன், நீண்ட நாள் கோரியினை ஏற்றுதற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நாங்க வீடு கட்டி இருக்கும் இடத்தை எங்களுக்கே பட்டா போட்டு கொடுத்திருக்காங்க,

எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.எங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு மனமார்ந்த நன்றியினை நிறைந்த மனதுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.இது போன்று வீட்டுமனை பட்டா பெற்ற மதுக்கரை வட்டம், குறிச்சிகிராமம்,சில்வர்ஜூப்லி, பகுதியை சேர்ந்த பயனாளி லெட்சுமி தெரிவித்ததாவது ;என் பெயர் லெட்சுமி, என் கணவர்பெயர்கண்ணையன்,நான் சமையல் வேலைக்கு சென்று வருகிறேன், இந்த இடத்தில் நாங்க கடந்த25 வருஷமாக வசித்து வருகிறோம், எங்களுக்குன்னு சொந்தமாக எந்தவொரு சொத்தும் கிடையாது, நாங்க வசிக்கும் இடம் புறம்போக்கு இடமாக இருந்தது,

வீட்டுமனைப்பட்டா வேண்டி மதுக்கரை தாலுக்கா அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தேன்.

இப்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் படி நாங்க வீடு கட்டி இருக்கும் இடத்தை எங்களுக்கே பட்டா போட்டு கொடுத்திருக்காங்க,இதன்மூலம் எங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி தந்த தமிழ்நாடு முதலமைச்சர்அவர்களுக்குஎங்கள்மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார். வீட்டுமனைப்பட்டாக்களை பெற்ற பயனாளிகள் முதல்அமைச்சர் துணை முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

# மேட்டுப்பாளையத்தில் வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு!




மேட்டுப்பாளையம்,ஜன.5

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 31ம் தேதி வரை தேசிய சாலை பாதுகாப்பு வார விழா கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது..இதன் ஒரு பகுதியாக கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் சாலைப் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. வட்டார போக்குவரத்து அலுவலர் சத்தியகுமார், மேட்டுப்பாளையம் காவல் துறை துணை கண்காணிப்பாளர் பாஸ்கர், ஆய்வாளர் சின்னகாமனன் உள்ளிட்டோர் சாலை பாதுகாப்பு மாத விழாவை முன்னிட்டு கோத்தகிரி வன சோதனை சாவடி அருகே சீட் பெல்ட் அணிவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி பள்ளிகளை சேர்ந்த வாகனங்கள் விழிப்புணர்வு பதாதகைகளுடன் ஊர்வலமாக சென்றனர். மேலும், நீலகிரி மாவட்டத்தில் இருந்து மேட்டுப்பாளையத்திற்கு வந்த சுற்றுலா பயணிகள் வாகனங்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும் சீட் பெல்ட்அணிவதன்அவசியம்குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

## பொதுத் தேர்வு எழுதும்

# மாணவ- மாணவியர்களுக்கு மாலை நேர சிற்றுண்டி!

## கோவை மாநகராட்சி முடிவு!!

கோவை, ஜன.5

கோவை மாநகராட்சி பள்ளிகளில் நடப்பு கல்வியாண்டில் எஸ்.எஸ்.எல்.சி பொதுத் தேர்வை1,895 பேர்,பிளஸ்2 பொதுத் தேர்வை 1,767மாணவ மாணவியர்கள் எழுத உள்ளனர்,இவர்களுக்கான மாலை நேர சிறப்பு வகுப்புகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.சிறப்பு வகுப்பில் பங்கேற்கும்3,662 மாணவ மாணவியர்களுக்கு மாலை நேர சிற்றுண்டி வழங்கப்படஉள்ளது.இதில் திங்கட்கிழமைதாளித்த பச்சைப்பயறு,பாதாம்பால்,செவ்வாய்க்கிழமை மசாலா கருப்பு கொண்டைக்கடலை,பருத்திப்பால், புதன்கிழமை வேகவைத்த வெள்ளை கொண்டைக் கடலை,கொள்ளுகஞ்சி, வியாழக்கிழமை புரூட்ஸ் சாலட்,கம்பங்கூழ்,வெள்ளிக்கிழமை வேகவைத்த மரவள்ளிக்கிழங்கு,பழஜூஸ் வழங்கப்படும், 2 வது மெனுவின் படி, திங்கட்கிழமை அவித்த நிலக்கடலை,சுக்குப்பால்,செவ்வாய்க்கிழமை தாளித்த நாட்டுமொச்சை,உளுந்தங்கஞ்சி, புதன்கிழமை தட்டைப்பயறு, கொள்ளுசாலட் தேங்காய்பால்,வியாழக்கழமை வெள்ளரி,கேரட், மக்காச்சோளம்சாலட், ராகிகூழ் , வெள்ளிக்கிழமை பனங்கிழங்குபிரை,கவுனி,அரிசி பாயாசம், ஆகியவை வழங்கமுடிவு செய்யப்பட்டுள்ளது.இந்த திட்டத்துக்கு மாநகராட்சி கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப் பட்டுஉள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



பாடல் பெற்ற தலமான அவிநாசிலிங்கேசுவரர் கோயிலில்நடந்தது.இதில்ஆடல்வல்லானுக்கு32திரவியங்களில் அபிஷேக ஆராதனையுடன் ஆருத்ரா தரிசன விழா. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.



# கோவை ஆர்.எஸ்.புரம் கலையரங்கில் சாய் அகாடமி 5ம் ஆண்டு விழா!

கோவை, ஜன.5

"கோவை மாநகராட்சி கலையரங்கத்தில் சாய் அகாடமி ஐந்தாம் ஆண்டு விழா" கோவை ஆர் எஸ் புரம் கலையரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இசைப்பள்ளியில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார். கோவை மாநகர் மாவட்ட அதிமுக செயலாளர் அம்மன் கே. அர்ஜூனன், கோவை மாநகராட்சி பள்ளிக்கல்வித்துறை கண்காணிப்பாளர்

திருமதி. நிர்மலா கிருஷ்ணமூர்த்தி , சங்கீத வித்வான் டாக்டர்எஸ். சிவாயா ராமலிங்கம், ஸ்ரீவில்வா நகைக்கடை உரிமையாளர்விஜயகுமார்& . பாலாஜி, ஜீ தமிழ் சரிகமபதநி புகழ் கே.ஜே.ஸ்ரீபதி, ஆர் எம் ஜே ஜுவல்லரி எம். ரகுநாதன் , ஹரி ஜுவல்லரி பி.எச்.ராகவேந்திரா கார்த்திக். ஷெல்ட்ரானிக்ஸ் நிறுவனர் சி. எம். சந்திரசேகரன், சார்ட்டர்டு அக்கவுண்டன்ட் ஜே. நாகராஜன், சாய் அகாடமி உரிமையாளர் திருமதி.லட்சுமி பாபு மற்றும் பள்ளியின் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். விழாவில் மாணவர்கள் தங்கள் இசை மற்றும் நடனத் திறமைகளை வெளிப்படுத்தி பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

# சிவகங்கை அருகே பட்டா வழங்க கோரி சாலை மறியல் போராட்டம்!

சிவகங்கை ஜன.5

சிவகங்கை அருகே உள்ள சமத்துவபுரம் முதல் சீனிவாசா நகர் பகுதி வரை தற்போது சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த பகுதியில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசித்து வரும் நிலையில், அப்பகுதி மக்களுக்கு இதுவரை முறையாக பட்டா வழங்கப்படவில்லை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

மேலும், சாலை அமைக்கும் பணியின் போது கழிவு நீர் வெளியே செல்ல தேவையான வடிகால் வாய்க்கால் வசதி செய்யப்படாததால், கட்டப்பட்ட வடிவில் உள்ள வாய்க்கால்களில் நீர் தேங்கி நிற்கிறது என்றும், இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். இந்த கோரிக்கைகளை முன்வைத்து, அப்பகுதி பொதுமக்கள் மதுரை – தொண்டி சாலையில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் வேலுநாச்சியாரின் 296 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, பல்வேறு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் வேலுநாச்சியார் மணிமண்டபத்திற்குச் செல்லவிருந்ததால், போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருக்க காவல்துறையினர் பொதுமக்களை அப்புறப்படுத்த முயன்றனர்.

அந்த நேரத்தில் சிவகங்கை பொறுப்பு டிஎஸ்பி கண்ணன் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.



# சேலம் திருவாகவுண்டனூர் பகுதியில் அகில பாரத ஐயப்ப பக்தர்கள் மாநாடு!

## அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்பு!!

சேலம், ஜன.5

சேலம் திருவாகவுண்டனூர் பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில், அகில பாரத ஐயப்ப பக்தர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து குரு மகா சன்னிதானங்கள், ஜீயர்கள், ஆன்மீகவாதிகள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட, தமிழக சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கூறும் போது, தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டு திமுக ஆட்சியில், 3967 கோவில்களில் திருக்குட முழக்கு விழா நடைபெற்றுள்ளதாகவும், 7628 கோடி ரூபாய் மதிப்புடைய, கோவில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும், முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான, இந்த திராவிட மாடல் ஆட்சியில், இந்து சமய அறநிலையத் துறைக்கு, ஏராளமான பணிகள் செய்யப்பட்டு வருவதாகவும், இந்தப் பணிகளுக்கு முதலமைச்சர் ஸ்டாலின் என்றும் உறுதுணையாக நிற்பார் என்றும், இந்த ஆன்மீக விழாவில் கலந்து கொண்ட, அனைத்து ஐயப்ப பக்தர்கள் மற்றும் சுவாமிமார்களுக்கு, தனது நன்றியினை தெரிவித்துக் கொள்வதாக, சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

# உடுமலை அருகே அம்மன் கோவில்களில் மார்கழி மாத பௌர்ணமி பூஜை!



உடுமலை,ஜன.5

உடுமலை அருகே உள்ள மலையாண்டிபட்டினம் அம்மன் கோவில்களில் மார்கழி மாத பௌர்ணமியையொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது .

உடுமலை அருகே உள்ள மலையாண்டிபட்டிணம் கிராமத்தில் ஸ்ரீ உச்சிமாகாளியம்மன் கோவிலில் மார்கழி மாத பௌர்ணமி மற்றும் திருவாதிரையை ஒட்டி அம்மனுக்கு 16 வகை அபிஷேகங்களும் சிறப்பு பூஜைகளும் நடந்தது

இதேபோல் மலையாண்டிபட்டினம் பைரிஸ்வரி அம்மன் கோவிலில் பௌர்ணமி பூஜையை ஒட்டி அம்மனுக்கு சிறப்பு அ லங்கார அபிஷேகங்கள் நடந்தது இதில் மலையாண்டிபட்டினம் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில்

# பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்ற வாலிபர்!

கோவை, ஜன. 5

கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில்

பெட்ரோல் ஊற்றி தீக்குளிக்க முயன்ற வாலிபரால் பரபரப்பு ஏற்பட்டது. ரூ. 4 லட்சத்தை மோசடி செய்தவர் மீது நடவடிக்கையை எடுக்க கோரிக்கை விடுத்தார்.

கோவை மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகம் முன்பு போலீசார் வழக்கம் போல பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது வாலிபர் ஒருவர் இன்று காலை 8 மணியளவில் ரத்தம் படிந்த சட்டை மற்றும் துண்டு உடன் கமிஷனர் அலுவலகத்திற்குள் வந்தார். அவரது கையில் பெட்ரோல் பாட்டிலும் இருந்தது. இதனை பார்த்த போலீசார் அவரை தடுத்து நிறுத்தினார். உடனே அந்த வாலிபர் பெட்ரோலை உடலில் ஊற்ற முயன்றார். அவரை தடுத்து நிறுத்தி போலீசார் அழைத்துச் சென்று விசாரித்தனர். அதில்

அவர் தனது பெயர் முகமது யாசின் என்றும், புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியை சேர்ந்தவர் என்றும் கூறியுள்ளார்.

தொடர்ந்து அவர் போலீசாரிடம் கூறியதாவது:

நான் தற்போது பொள்ளாச்சியில் பரோட்டா கடையில் தங்கி வேலை பார்த்து வருகிறேன். நான் சவுதி அரேபியாவில் வேலை செய்து வந்த போது கோவை சரவணம்பட்டியை சேர்ந்த முகமது சாலிக் என்பவர் அறிமுகமானார். அவர் தற்போது கேரளாவி ல் வசித்து வருகிறார். அவர், என்னிடம் சரவணம்பட்டியில் உள்ள இடத்தை எனக்கு விலைக்கு தருவதாக கூறினார். இதையடுத்து கடந்த 6 மாதத்திற்கு முன்பு நான், முகமது சாலிக்கிடம் நிலம் வாங்குவதற்காக ரூ.4 லட்சத்து 50 ஆயிரத்தை கொடுத்தேன். ஆனால் அவர் நிலத்தை பதிவு செய்யாமல் இருந்து வந்தார். இதனால் நான் கொடுத்த பணத்தை திருப்பி கேட்டேன். அதையும் அவர் தராமல் ஏமாற்றி வருகிறார்.

நேற்று அவரிடம் பணத்தை கேட்ட போது அவர் மற்றும் 6 பேர் என்னை பொள்ளாச்சி அமராபாளையம் அருகே அழைத்துச் சென்று சரமாரியாக தாக்கினர். பின்னர் என்னிடம் இருந்த பணம் கொடுத்ததற்கான ஆவணங்களை பறித்துச் சென்றனர்.

இதுகுறித்து ஆனைமலை போலீசில் புகார் செய்துள்ளேன். ஆனால் தனது செல்போன் மற்றும் பொருட்களை போலீசார் பறித்துக் என்னை அடித்து அனுப்பி விட்டனர். முகமது சாலிக் மற்றும் அவரது அடியாட்கள் தாக்கியதால் எனது மூக்கிலிருந்து தொடர்ந்து ரத்தம் வருகிறது. எனது பணம் மற்றும் ஆவணத்தை போலீசார் மீட்டு தரவேண்டும். மேலும் என்னை ஏமாற்றி தாக்கிய முகமது சாலிக் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கண்ணீர் மல்க கூறினார்.



உடுமலை அருகே ஆல் கொண்டமால் கோயில் திருவிழா ஆலோசனைக் கூட்டம் கோட்டாட்சியர் குமார் தலைமையில் நடந்தது

## கோவை மாணவி கூட்டுப் பாலியல் வழக்கு:
# மகளிர் நீதிமன்றத்தில் 3 பேர் ஆஜர்!
## ஜனவரி 9- க்கு விசாரணை ஒத்திவைப்பு!!

கோவை,ஜன.5

கோவை விமான நிலையம் அருகே கல்லூரி மாணவியை கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் தொடர்புடைய 3 பேரை மகளிர் நீதி மன்றத்தில் போலீசார் நேற்று ஆஜர்ப டுத்தினர்.

கோவை விமான நிலையம் அருகே குடியிருப்புகள் இல்லாத பகுதியில் கடந்த நவம்பர் 2ம் தேதி, தனது ஆண் நண்பருடன் காரில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த கல்லூரி மாணவியை, 3 பேர் கடத்தி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் அளிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி பகுதியைச் சேர்ந்த சதீஷ் (எ) கருப்பசாமி (30), அவரது சகோதரர் காளி (எ) காளீஸ்வரன் (21) மற்றும் மதுரை மாவட்டம் கருப்பாயூரணி பகுதியைச் சேர்ந்த குணா (எ) தவசி (20) ஆகிய 3 பேரை போலீசார் சுட்டுப் பிடித்து கைது செய்தனர்.

காயங்களுடன் கோவை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மூவருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை கோவை கூடுதல் மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், சமீபத்தில் மகளிர் நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கை நீதிபதி சுந்தரராஜன் விசாரித்து வருகிறார்.

இந்நிலையில், சதீஷ், காளீஸ்வரன், குணா ஆகிய 3 பேரும் மகளிர் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிபதி, விசாரணையை ஜனவரி 9ம் தேதிக்கு ஒத்தி வைத்து உத்தரவிட்டார். இதையடுத்து, 3 பேரும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர்.



# ஆக்கிரமிப்பை அகற்றக்கோரி தாசில்தாரிடம் கிராம மக்கள் மனு!

முதுகுளத்தூர்,ஜன.5

முதுகுளத்தூர்தாலுகாசடையனேரிகிராமத்தில்பொது பாதையை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் கிராமத்திற்குள அவசரகாலங்களில்கூடஆம்புலன்ஸ்வரமுடியவில்லை. ஆகையால் ஆக்கிரமிப்பை அகற்றித்தருமாறு சடயனேரி கிராமத் தலைவர் மாயகிருஷ்ணன், செயலாளர் சுதாகர் பொருளாளர் சவுந்தரபாண்டி ஆகியோர் கிராமக்களிடம் கையொப்பம் பெற்று முதுகுளத்தூர் தாசில்தாரிடம் மனு கொடுத்தனர். ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக தாசில்தார் உறுதியளித்தார்.

# சென்னிமலை ஒன்றியத்தில் கூட்டுக் குடிநீர் திட்ட வளர்ச்சிப் பணி!
## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் ஆய்வு கூட்டம்!!

ஈரோடு,ஜன. 5

சென்னிமலை ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியப் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.



நிகழ்ச்சிக்குதமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமை வகித்தார்.

பின்னர் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசும்போது, காங்கயம் சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட 151 மேல்நிலைத் தொட்டிகளுக்கு 148 பகிர்மானக் குழாய்கள் வழங்கும் பணி நிறைவடைந்துள்ளது. மேலும், பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள் மேற்கொள்ளும் போது எதிர்கொள்ளும் இடர்பாடுகளை உடனடியாக களைந்து, பொதுமக்களுக்கு 434 காவிரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக குடிநீர் வழங்க தகுந்த ஏற்பாடுகளை செய்து தர வேண்டும் என்றார்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப் பட வேண்டிய பணிகளையும், ஊராட்சிகள் விரைந்து முடிக்கும்படி அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில், மேல்நிலைத் தொட்டிகளுக்கு ஏற்றப்படும் நீரின் அளவு குறித்தும், விநியோகிக்கப்படும் அளவு குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

முழுமையாக பணிகள் அனைத்தையும் முடித்து முழு அளவு நீரேற்றம் செய்து, சீரான குடிநீர் விநியோகத்தை விரைந்து வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி, திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) பிரியா, மேற்பார்வை பொறியாளர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்) விநாயகம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாக்கு எண்ணிக்கை மையத்தில் கோவை கலெக்டர் ஆய்வு!



கோவை,ஜன.5

தமிழக சட்டமன்றத்திற்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் செய்து வருகிறது.

தற்போது வாக்காளர் பட்டியலில் புதிதாக பெயர் சேர்த்தல், திருத்தம் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்காக கோவை மாவட்டத்தில் உள்ள 3463 வாக்குச்சாவடிகளல் இரண்டு நாட்கள் சிறப்பு முகாம்கள் நடக்கிறது. கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம், கவுண்டம்பாளையம், கோவை வடக்கு, தெற்கு உள்ளிட்ட பத்து சட்டமன்ற தொகுதிகள் உள்ளன, இந்த சட்டமன்ற தொகுதிகளில் பதிவாகும் வாக்குகள் கோவை தடாகம் ரோடு அரசு தொழில்நுட்ப கல்லூரியில் ( சிஐடி) வைத்து எண்ணப்பட உள்ளது,

இதற்காக அங்கு மின்னணு வாக்குப் பதிவு எந்திரங்களை பாதுகாப்பாக வைக்கும் ஸ்ட்ராங் ரூம், கட்டுப்பாட்டு அறை, கண்காணிப்பு கேமரா அறை, வாக்கு எண்ணும் அறைகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

இந்த நிலையில் வாக்கு எண்ணும் மையமான அரசு தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று மாவட்ட கலெக்டர் பவன்குமார். மாநகராட்சி ஆணையாளர்சிவகுருபிரபாகரன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்தனர்.

அப்போது பத்து சட்டமன்ற தொகுதிகளிலும் பதிவான வாக்குகளை தனித்தனியாக வைக்க வேண்டிய ஸ்ட்ராங் ரூம், எண்ணிக்கை மையங்கள் ஆகியவை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர், மேலும் வாக்கு எண்ணிக்கையின் போது அரசியல் கட்சிகளின் முகவர்கள் வந்துசெல்ல தனிப்பதை அமைப்பது,கண்காணிப்பு கேமராக்கள். கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்க வேண்டிய இடங்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வின் போது போலீஸ் துணை கமிஷனர் ( தெற்கு ) கார்த்திகேயன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ( தேர்தல் ) மகேஸ்வரி, தாசில்தார் தணிகைவேல், மாவட்டசெய்திமக்கள் தொடர்புத்துறை அதிகாரி ஆ.செந்தில் அண்ணா மற்றும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.



# நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்!

மேலூர் ஜன.5

மதுரை மாவட்டம், மேலூர் வட்டாரத்தில் உள்ள தெற்குத் தெரு ஊராட்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது.

நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமில் 17 சிறப்பு மருத்துவர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை அளித்தனர். முகாமில் அனைத்து விதமான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. குறிப்பாக இருதய ஸ்கேன், கர்ப்பிணிகளுக்கான அல்ட்ரா சவுண்டு ஸ்கேன், எக்ஸ்ரே, மற்றும் அனைத்து ரத்தம் மற்றும் நீர் பரிசோதனை செய்யப்பட்டது.

முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

முகாமில் மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர். குமரகுருபரன், மேலூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் அம்பலம் சிவநேஷ், ஆகியோர் முகாம் ஏற்பாடு செய்திருந்தனர். முகாமில் 100 க்கும் மேற்பட்ட கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது. உடன் இணை இயக்குநர் செல்வராஜ், துணை இயக்குநர்கள் ராஜசேகரன் (காசநோய்), ஆனந்தன் ( தொழு நோய்) மற்றும் டாக்டர்கள், மருத்துவ அனைத்து பணியாளர்கள் கலந்து கொண்டனர்.




பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இளைஞர்கள், மற்றும் மகளிருக்கான விளையாட்டு போட்டி நடத்துவது சம்பந்தமாக அமைச்சர் சு.முத்துசாமி ஒன்றிய கழக , பகுதி கழக நிர்வாகிகளுடன் நடத்திய ஆலோசனை கூட்டத்தில்பேசிய போது எடுத்த படம்.அருகில் சந்திரகுமார் எம்.எல்.ஏ,மாவட்ட கழகத் துணை செயலாளர் செந்தில் குமார், மாநகர கழக செயலாளர் சுப்ரமணியம் மற்றும் கழக நிர்வாகிகள்உள்ளனர்.



கோயம்புத்தூர்மாவட்டம்கிணத்துக்கடவுவட்டம்வடசித்தூர்அரசுமேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு கர்ப்பினித் தாய்மார்களுக்கு மகப்பேறு பெட்டகத்தினை வழங்கினார். அருகில் மாவட்ட மருத்துவ அலுவலர் பாலுச்சாமி உள்ளார்.

# பழுதடைந்த பாதாள சாக்கடை மூடியால் பஞ்சராகும் கார்கள்!



உடுமலை,ஜன.5

உடுமலை நகராட்சியில் பாதாள சாக்கடை வசதி செய்யப்பட்டுள்ளது. ஆங்காங்கே ஆள் நுழைகூழிகள் உள்ளன.

இந்த குழிகளில் மூடிகள் பல இடங்களில் சேதம் அடைந்து காணப்படுகின்றன. கம்பியில் வெளியே நீட்டி கொண்டிருப்பதால் வாகனங்களின் டயர்கள் பஞ்சர் ஆகின்றன.உடுமலை தாராபுரம் ரோடு ஸ்டேட் பாங்க் காலனி பிரிவில் நேற்று பாதாள சாக்கடை குழியில் வெளியே நீட்டிக் கொண்டு இருந்த கம்பி கிழித்ததில் அவ்வழியே வந்த கார் டயர் பஞ்சரானது. பாதாள சாக்கடை மேன் ஹோல் அனைத்தும் முறையாக பராமரிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அதிமுக சார்பில் மதுராந்தகம் தொகுதியில் விளையாட்டு உபகரணங்கள்!
## எம்எல்ஏ வழங்கினார்!!

செங்கல்பட்டு, ஜன.5

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் தொகுதியில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக அவர்களின் நலன் கருதி கிரிக்கெட் கிட், வாலிபால் கிட், உள்ளிட்ட உபகரணங்களை மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் கே.மரகதம் குமரவேல் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார்.

செங்கல்பட்டு மாவட்டம் கருங்குழி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றியுள்ள கிராமங்களில் இளைஞர்கள்

நலன் கருதி விளையாட்டு ஊக்குவிக்கும் வகையில் கிரிக்கெட் கிட் வழங்கும் நிகழ்ச்சி கருங்குழி பேரூர்கழக செயலாளர் ஆர்.டி.ஜெயராஜ், ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மதுராந்தகம் அதிமுக சட்டமன்ற உறுப்பினரும், மாநில மகளிர் அணி இணைச் செயலாளருமான கே.மரகதம் குமரவேல் தனது சொந்த செலவில் 5 கிரிக்கெட் கிட், 2 வாலிபால் கிட், ஆகியவை விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார். இதில் அதிமுக நிர்வாகிகள், இளைஞர்கள் பலர் கலந்து கொண்டர்.



# திருப்பத்தூர் அருகே தாய் கண் முன்னே 5 வயது சிறுவன் ஏரியில் தவறி விழுந்து உயிரிழப்பு!

திருப்பத்தூர். ஜன.5

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த பணியாண்டப்பள்ளி அருகே வாலூர் பகுதியை சேர்ந்த மணி சத்யா தம்பதியினர். இவர்களுக்கு பிரியதர்ஷினி(13 ), எஸ்மிதா (8 ), சரண்( 5) என மூன்று குழந்தைகள் உள்ளனர்.

மேலும் சத்யா பீடி சுற்றும் தொழில் செய்து வரும் நிலையில் இன்று வீட்டின் அருகே உள்ள ஏரிக்கரையில் மூன்று குழந்தைகளுடன் வழக்கம்போல பீடி சுற்றும் பணியில் ஈடுபட்டிருந்துள்ளார்.

அப்போது ஏரி தரையில் அருகே அமர்ந்து கொண்டு பிரியதர்ஷினி மற்றும் அவரது தம்பி சரண் ஐந்து வயது சிறுவன் ஆகிய இருவரும் மீன் பிடித்துள்ளனர்.

அப்போது எதிர்பாராத விதமாக சரண் 20 அடி ஆழம் கொண்ட ஏரியில் தவறி விழுந்த நிலையில் அவனை காப்பாற்றுவதற்காக சிறுமி பிரியதர்ஷினி ஏரியில் குதித்துள்ளார்.

அதனை பார்த்த தாய் சத்தியா அலறி அடித்துகொண்டு மகள் பிரியதர்ஷினியை காப்பாற்றிய நிலையில் சத்யாவின் அழுகை சத்தம் கேட்டு அங்கிருந்த பொது மக்கள் ஓடி சென்று பொதுமக்களே ஏரியில் மூழ்கிய ஐந்து வயது சிறுவனை சடலமாக மீட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற கந்திலி போலீசார் பிரேதத்தை கைபற்றி பரிசோதனைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து கந்திலி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

ஏரிக்கரையோரம் பீடி சுற்றும் பணியில் ஈடுபட்டிருந்த தாய் கண் முன்னே ஐந்து வயது மகன் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதி மக்களுடைய பெரும் சோகத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.



பொங்கல் விழாவை வரவேற்கும் விதமாக போச்சம்பள்ளி பகுதியில் பூத்துக்குலுங்கும் பண்ணை பூக்கள்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி நகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் (2023 2024) கீழ் ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் 9 வார்டு பகுதியில் கட்டப்பட்ட. புதிய சமுதாய கழிப்பறையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தேன். இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர்மன்றத் துணைத் தலைவர் குணா,பரமக்குடிவடக்குநகரகழகசெயலாளர்ஜீவரத்தினம், நகராட்சி இளநிலை பொறியாளர் சுரேஷ், நகர்மன்ற உறுப்பினர் கருப்பையா, நெசவாளர் அணி அமைப்பாளர் சந்திரசேகர்,வார்டு செயலாளர் கஜேந்திரன், ஆதி திராவிடர் அணி அமைப்பாளர் கோவிந்தராஜ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெயிந்த், கழக நிர்வாகி சிவக்குமார், கிராமத் தலைவர் நாகநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.